Name of the Newspaper: T. Hindu Date: 13/8/17

# மெட்ரோ ரயில் நிறுவனத்தில் குழந்தைகள் காப்பகம்

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பெண் ஊழியர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க கோயம்பேடு நிர்வாக அலுவலக வளாகத்தில் குழந்தைகள் காப்பகத்தை அமைத்திருக்கிறது. இந்தக் காப்பகத்தில் ஆறு மாதம் முதல் பத்து வயதுவரையுள்ள குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள். தாய்ப்பால் கொடுப்பதற்கெனத் தனி இடமும் இருக்கிறது.




இந்த காப்பகத்தில் விளையாட்டுப் பொம்மைகளும் புத்தகங்களும் உள்ளன. மகளிர், குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ராஜீவ் காந்தி தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் வழியாக இந்தக் காப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டு பராமரிப்பாளர்கள் உள்ளனர். காலை ஒன்பது மணி தொடங்கி மாலை ஆறு மணிவரை இந்தக் காப்பகம் செயல்படும். டெல்லி மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் குழந்தைகள் காப்பகம் அறிமுகப் படுத்தப்பட்டது.